# திருமந்திரமும் திருப்புகழும் காட்டும் சித்தரியல்: ஓர் ஒப்பிடு

# The Principles of Siddhars (Siddhariyal) in Tirumanthitam and Tiruppukal: A Comparison

**இராமலிங்கம் அய்யாக்கண்ணு** / Ramalingam Iyakanno[1]

Date of submission: 2024-05-02
Date of acceptance: 2024-05-23
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name: Ramalingam Iyakanno
Email: ramabarathi@yahoo.com

**Abstract**

Siddhars are esteemed yogis who have achieved profound knowledge and mastery over the mind to realize divine truth. The term *siddhariyal* encompasses the principles, ethics, and philosophies of the siddhars, whose spiritual objective is to attain immortality, liberation, and eternal bliss within a single lifetime. Their approach is highly individualized, with diverse principles related to God, the soul, the body, liberation, and yogic practices aimed at achieving their spiritual goals. This study, conducted as a library-based research, explores the principles of God, the soul, and Kundalini experience as outlined in the texts *Tirumanthiram* and *Tiruppukal*. These texts, rich in philosophical content (*cattiram*) associated with tantric principles, were examined and cross-referenced with the teachings of renowned siddhars. The analysis reveals that both texts underscore the doctrine of the Siddhars: the existence of a singular deity, Siva, who manifests as Sivam and Sakti within the state of consciousness known as vettaveli. Siva is considered immanent in the soul, while Kundalini represents the mystic energy that bridges the divine and the soul within this state of consciousness. The principles of God, the soul, and Kundalini are thus interconnected, reflecting the siddhars' pursuit of divine realization, immortality, and eternal bliss. A thorough understanding of these three principles is essential for achieving divine realization and experiencing eternal bliss in one's life.

**Keywords:** *Siddhar, Siddhariyal,* Principles, *Tirumanthiram*, *Tiruppukal*, Siva God, Soul, *Kundalini, Vettaveli*

## முன்னுரை

'சித்தரியல்' என்னும் சொல் சித்தர், இயல் ஆகிய இருசொற்களின் உள்ளடக்கம் ஆகும். சித்தர் என்றால் சித்தத்தை (மனத்தை) வென்றவர்கள் என்ற பொருள் உண்டு. வால்மீகர் சித்தரும்

*'சிந்தை தெளிந் திருப்பவன் ஆர் அவனே சித்தன்,*

*திறந்து மனத்தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்'*

*(வான்மீகர் சூத்திர ஞானம், 2017, பா. 2.3)*

[1]The author is a research student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. s2152983@siswa.um.edu.my

என்கின்றார். சித்தர் என்னும் சொல்லில் அடங்கியுள்ள சித்து (சித்) என்னும் சொல்லானது அறிவு அல்லது ஞானத்தைக் குறிக்கின்றது (மகாராசன், 1997). ஆகவே, சித்தர் என்பவர் சித்தத்தை வெல்லும் ஞானத்தை அல்லது வழிமுறைகளைக் கைவரப்பட்டவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். 'இயல்' என்னும் சொல் நெறி அல்லது வழிமுறையைக் குறிக்கின்றது. ஆகவே, சித்தரியல் என்னும் சொல்லைச் சித்தர் நெறி, சித்தர் மரபு அல்லது, சித்தர் தத்துவம் என்று பொருள் கொள்ளலாம்.

சித்தர்களுக்கு ஓர் இலக்கணம் இருப்பதாகச் சுவாமி காரை சித்தர் கூறுகின்றார்.

*'சித்தியெனில் கண்கட்டு வித்தையல்ல*
*சில்லறையாம் கருமத்துச் செய்கையல்ல*
*மித்தையெனும் சூனியமாம் மாயமல்ல*
*மின்னணுவாம் விஞ்ஞான வியப்புமல்ல*
*சித்தியெனில் ஈசனுடன் ஒன்றாம் சித்தி*
*சிவனாலானவனே தான் சித்தன்'*

(சாந்தி, 1997, ஈழத்துச் சித்தர் மரபு, 217)

சித்தர் என்பவர் சித்து வித்தைகள், மாந்திரங்கள், இராசவாதம் செய்வோர் அல்லர். சீவன் சிவனாவது தான் சித்து. தம்மைத்தாமே அறிந்து, தலைவனாகிய சிவனை அறிபவரே சித்தர். திருமூலரும் சித்தர் தாம் இயல்புகளை விவரிக்கின்றார்.

'வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே'

(திருமந்திரம், 124)

சிதாகாயப் பெருவெளியில் (வெட்ட வெளியில்) ஒளிமயமாய் சிவன் ஒளிர்வதை தம் ஞானத்தின்கண் உணர்ந்தவரே சித்தர் என்கின்றார். இதைதான், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்று தேவாரம் கூறுகின்றது (அன்பழகன், 2006). மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்து, ஆன்ம விடுதலைப் பெற்று, நிலைத்த பேரின்பம் ஏய்துவதே சித்தர்களின் ஆன்மப் பயணமாகும் (நாராயணன், 1990). இப்பேரின்ப நிலையை அடைய சித்தர்கள் மேற்கொண்ட நெறிமுறைகளே சித்தரியல் எனப்படும்.

## ஆய்வின் நோக்கம்

சீவனில் சிவனைக் கண்டு பேரானந்தமிக்க வீடுபேற்றை அடைய ஒரு குறிப்பிட்ட நெறியைதான் சித்தர்கள் அனைவரும் பின்பற்றினர் என்பதற்கான ஆதாரங்கள் யாதும் கிடையாது. சித்தர்களின் பாடல்களில் இந்நெறியைக் குறித்த ஒருமித்த கூட்டுச் சிந்தனையோ அல்லது அணுகுமுறையோ வெளிப்படவில்லை. அவர்கள் தம் ஆன்மீக அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே அடைந்த வீடுபேறு மற்றும் இறவாமை பற்றி குறிப்பிட்டுள்ளனர் (கணபதி, 1993). அத்துடன், சித்தர்களின் இலக்கியம் பல நூற்றாண்டுகளை உள்ளடக்கிய பலவிதமான, வேறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதால், அவையாவும் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளாக வடிவமைக்கப்படவில்லை. தமிழ்ச் சித்தர்கள் சமய அமைப்புகளைச் சாராதவர்களாக விளங்குவதால் சித்த நெறிகளை வரையறுக்கும் நூல்களும் இல்லை (கோவிந்தன், 2007). ஆகவே, சித்தர் பாரம்பரியத்தின் குருவான திருமூலர், தாயுமானவரால் "உன்னைப்போல் ஓர் சொல் விளம்பினார் யார்" என்று புகழப்பட்ட அருணகிரிநாதர் ஆகியோரின் சித்தர் நெறி குறித்த சிந்தனையை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுப் பின்புலம்

திருமந்திரமும் திருப்புகழும் இவ்வாய்வின் மூல நூல்களாகும். திருமந்திரத்தை அருளிய திருமூலதேவ நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராவார். அவர் சித்த மரபிலே முதன்மையானவர். இவர் காலத்துக்குப் பின்னர் தோன்றிய சித்தர்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவர். இவரது காலம் இன்னும் அறுதியிட்டு நிர்ணிக்கப்படவில்லை. இருப்பினும் , இவர் கி.மு. 3000 முதல் கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில்

வாழ்ந்தவராகக் கூறப்படுகின்றது (எழில்ராமன், 2015). இவர் அருளிய திருமந்திரம் 3047 பாடல்களைக் கொண்டுள்ளது (வரதராஜன், 2008). இப்பாடல்கள் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தந்திரத்தை வாழ்க்கைக்கு வேண்டிய அறங்களை வழியுறுத்தும் வாழ்வியல் பகுதியாகவும் இரண்டாம் தந்திரத்தைச் சிவனது இயல்பையும் பெருமையையும் புகழ்ப்பாடும் தோத்திரமாகவும், மூன்றாம் தந்திரத்திலிருந்து ஒன்பதாம் தந்திரம் வரை இறைவனை அடைவதற்குறிய நெறிகளை விவரிக்கும் சாத்திரமாகவும் திருமூலர் அமைத்துள்ளார்.

திருப்புகழ் 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அருணகிரிநாதரால் பாடப்பெற்ற நூலாகும். இந்நூலில் 1328 பாடல்கள் இடம்பெற்றுள்ளன (செங்கல்வராயப்பிள்ளை, 2019). இப்பாடல்கள் ஆறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆன்மிகப் பயணத்தில், அருளார்கள் பலர் இறைவன் புகழ்பாடி இறையருள் பெற்றனர், ஆனால் அருணகிரிநாதரோ திருமுருகனின் இறையருள் பெற்று அவனின் திருப்புகழ் பாடினார். முருகன் அருணகிரிநாதருக்கு ஒரு முறை அருளவில்லை, ஆறு இடங்களில் காட்சித் தந்து, அருளினார் (ரஞ்ஜித், 2019). இத்தகைய இறையருளால், தத்துவங்களும் இறை வித்தைகளும் இமைப்பொழுதில் அடைந்த அருணாகிரிநாதர், அவற்றைச் சித்தாந்த, வேத, ஆகம, சித்தர், புராண, இதிகாச, மந்திர, சாத்திர, தோத்திரங்களின் சாரமாகத் திருப்புகழில் புத்தியுள்ளார் (சதாநந்தன், 2002). ஆகவே, இவ்விரு நூல்களிலும் சித்தரியல் தொடர்பான சாத்திரக் கூறுகள் நிறைய இடம்பெற்றுள்ளன.

### ஆய்வின் வரையறை

சித்தர் நெறியானது இறை, உயிர், உடல், வீடுபேறு ஒட்டிய கோட்பாடுகளையும் யோக நெறிகளையும் உள்ளடக்கியுள்ளது. யோக நெறியில் குரு, தீட்சை, காய சித்தி, நியாசம், ஞானம், குண்டலினி சக்தியை எழுப்பும் கூறுகள் அடங்கியுள்ளன. குண்டலினிச் சக்தியை எழுப்பும் அணுகு முறையானது அட்டாங்க யோகம், இலய யோகம், மந்திர யோகப் பயிற்சிகளைக் கொண்டுள்ளது. இக்கூறுகள் அனைத்தையும் இவ்வாய்வில் விளக்க இயலாது. ஆகவே, இறை, உயிர், குண்டலினி அனுபவம் ஆகிய மூன்று கோட்பாடுகள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இம்மூன்றும் ஒன்றுகொன்று தொடர்புடையவை.

### இறைக் கோட்பாடு

சித்தர்கள் ஏக இறைக் கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகின்றனர். எல்லா சமயங்களையும் தத்துவங்களையும் நிலைகளையும் கடந்த பரம்பொருளான இறைவனையே கடவுளாக ஏற்றுக் கொள்கின்றனர் (தேவநாயகம், 1998). திருமூலர் திருமந்திரத்திலும் இந்த ஏக இறைக் கோட்பாட்டினை வலியுத்துகின்றார்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவன்" (திருமந்திரம், 2104)

அனைத்து மனித இனத்திற்கும் ஒருவனே இறைவன். அவ்விறைவன் எப்படிப்பட்டவன் என்பதையும் திருமூலர் விளக்குகின்றார்.

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தான் உணர்ந் தெட்டே"

(திருமந்திரம், 1)

சிவன் ஒருவனே இறைவன். அவன் சக்தியோடு இரண்டாய், மும்மூர்த்தியாய் முத்தொழில்களைச் செய்து, நான்கு வேதங்களின் உண்மையை விளக்குவனாய், ஐந்து இந்திரியங்களை (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை) அடக்கும் ஆற்றலை அளிப்பவனாய், ஆறாதாரங்களிலும் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை) விரிந்து, ஏழாவதாகிய சகசரதளத்தின் மீது பொருந்தி, எட்டுப் பொருள்களையும் (நிலம், நீர், காற்று, தீ, விண், சூரியன், சந்திரன், ஆன்மா) உணர்ந்த அட்டமூர்த்தியாய் விளங்குகின்றான் என்று விவரிக்கின்றார். ஆகவே, இறைவன் ஒருவனே. அவன் சிவம், சக்தி ஆகிய இரு நிலைகளில் சகசரதளத்தில் அமைந்துள்ள வெட்டவெளியில்

கலந்து விளங்குகின்றான்.

அருணகிரிநாதரும் ஒரே கடவுள் கோட்பாட்டினை வலியுத்துகிறார்.

"செகத்துக் கொருத்தர் புத்ர" (திருப்புகழ், 243)

உலகக்கு ஒரே கடவுள் சிவபிரானுடைய குமரனே என்று கூறி. அதனை மேலும் விவரிக்கின்றார்.

*"தொல்லைமுதல் தானொன்று மெல்லிரு பேதங்கள்*

*சொல்லுகுண மூவந்த மெனவாகி*

*துய்ய சதுர் வேதங்கள் வெய்யபுல னோரைந்து*

*தொய்யுபொரு ளாறங்க மெனமேவும்*

*பல்லபல நாதங்கள் அல்கபசு பாசங்கள்*

*பல்குதமிழ் தானொன்றி யிசையாகிய*

*பல்லுயிருமாயந்த மில்ல சொரு பாநந்த*

*பௌவ முறவே......"* (திருப்புகழ், 389)

பழம்பொருள், முதற்பொருள் எனத் தான் ஒன்றே விளங்குவதாய், சிவம் சக்தி என்னும் இரு வேறு தன்மையாய், இராசத, தாமத, சாத்துவீக எனப்படும் முக்குண முடிவாய் உடைய மும்மூர்த்தியாய், பரிசுத்தமான நான்கு வேதங்களாய், கொடிய புலன்கள் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும்) ஐந்தையும் சோர்வடையச் செய்யும் பொருள் கொண்ட ஆறு அங்கம் (வேதாங்கம்) என ஆறு வகைப்பட்ட வேதப் பொருள் உணர்த்தும் கருவிகளாய், பலப்பல ஒலிகளில் தங்குவதாய், உயிர், தளை என்பனவாய், பெருகும் தமிழிற் பொருந்தி இன்னிசையாய், பல உயிர்களுமாய், முடிவில்லாதாய் உள்ள ஆனந்த கடலை அடைய செய்யவல்ல பொருள் அது என்று விளக்குகின்றார். இறைவனானவன் சிவம், சக்தி ஆகிய இருநிலைகளில் விளங்குகின்றான்.

அருணகிரிநாதர் தொடர்ந்து கூறுகின்றார்.

*"உருவி லாத பாழில் வெட்டவெளியி லாடு நாத நிர்த்த"*

(திருப்புகழ், 442)

உருவம் கடந்த பாழ்வெளியில் வெட்ட வெளியிலே ஆடுகின்ற கூத்தனே (நடராசப் பொருமானே) முதற்பொருள் என்று கூறுகின்றார். அருணகிரிநாதர் சிவனை ஆடவல்லனாக (நடனத் திறன் கொண்டவர்) சித்தரிக்கிறார். இது நடராசராக வெளிப்படும் சிவனின் தோற்ற வடிவமாகும் (வாசு, 2008). ஒரே கடவுள் முருகன் என்று கூறிய அருணகிரிநாதர், முருகனைச் சிவனாக உருவகப்படுத்துகின்றார். முருகனும் சிவனும் வேறில்லை, இருவரும் ஒன்றே என்று வலியுறுத்துகின்றார். அத்தகைய சிவனையே வெட்டவெளியில் சிவசக்தியாக உணர்ந்தாகக் கூறுகின்றார்.

ஒரே கடவுளான சிவனாவன், சிவம் சக்தியாய் வெட்டவெளியில் விளங்குவதாய்த் திருமூலரும் அருணகிரிநாதரும் தத்தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகைய சிவன் எப்படிப்பட்டவர் என்பதை சித்தர்களுள் ஒருவரான பட்டினத்தார் (2017) விளக்குகின்றார்.

*"வாக்கும் மனமும் வடிவும் இல்லா வான்பொருள்"*

(அருள் புலம்பல், 57)

பத்திரகிரியார் (2017) இதனை மேலும் விவரிக்கின்றார்.

*"இன்னதென்று சொல்லவொண்ணா எல்லை யற்ற*

*வான்பொருள்".* (மெய்ஞ்ஞான புலம்பல், 162)

இங்கு "வான்பொருள்" என்பது வெட்டவெளியில் அல்லது பெருவெளியில் விளங்கும் சக்தியைக் குறிக்கின்றது. தொடர்ந்து, சிவன் எங்குள்ளான், எப்படி உள்ளான் என்பதைச் சிவவாக்கியர் (2017) முடிவாகவும் தெளிவாகவும் விளக்குகின்றார்.

*'இன்னதென்று விவரிக்க முடியாத பெருவெளியில்*

*இறைவன் சிவமாகவும் சக்தியாகவும் இருக்கின்றார்'* (சிவவாக்கியர், 98)

சித்தர்களின் கூற்றுப்படியும், சிவனாவன் சிவமும் சக்தியாக வெட்டவெளியில்

விளங்குகின்றான். திருமந்திரமும் திருப்புகழும் உணர்த்தும் இறைக் கோட்பாடானது சித்தர்களின் மரபையே ஒட்டியுள்ளது.

### உயிர்க் கோட்பாடு

சீவனின் (உயிரின்) மூலம் சிவனை அடைந்து, மரணமிலாப் பெருவாழ்வு வாழவேண்டும் என்பது சித்தர்களின் உயரிய நோக்கம். அதன் வழி, பிறப்பற்று, பேரின்ப நிலையை அடைய முடியும். அதற்கு ஆதாரமானது உயிர். உயிரானது ஆன்மா என்றும் சீவன் என்றும் சித்தர்களால் அழைக்கப்படுகின்றது. இருப்பினும், இந்நிலையை இப்பிறவிலேயே அடைய வேண்டும் என்று சித்தர்கள் வலியுறுத்துகின்றனர், ஆன்மா அழிவில்லாதாகையால், மீண்டும் பிறவி எடுக்கையில் இவ்வாய்ப்பு இல்லாமற் போகலாம். ஒரு மனிதனின் இருவினைகள் அடுத்தப் பிறவியை நிர்ணிப்பதால், மீண்டும் மனிதப் பிறவியை எடுப்பது இவ்வினைகளின் தன்மையைப் பொருத்துள்ளது.

திருமூலர் உயிரைச் சீவன் என்றும், அச்சீவனும் சிவனும் வேறுபட்டவர்கள் அல்லர் என்று குறிப்பிடுகின்றார்.

*‘சீவ னெனச்சிவ னென்ன வேறில்லை’* (திருமந்திரம், 2017)

சீவனும் சிவனும் ஒன்றே என்று கூறுகின்றார். சிவன் சீவத்துள்ளே உள்ளான். மேலும், சீவனின் இருப்பிடத்தையும் விளக்குகின்றார்.

*‘உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே’* (திருமந்திரம், 197)

உயிரானது சிரசிரசின் உச்சிப் பகுதியில் விளங்குவதாகக் கூறுகின்றார். திருமூலர், அவ்வுயிரின் தன்மையை விளக்குகின்றார்.

*‘சீவன் துரிய முதலாகச் சீரான*

*ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்*

*தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே*

*மேவிய நாலேழ் விடுத்துநின் றானே’*

(திருமந்திரம், 2284)

சீவனாது துரியத்தில் (கழுத்தின் மேல் பகுதியில்) தொடங்கி, பத்து நிலைகளைக் கடந்து பராபரனோடு (சிவனோடு) பொருந்துகையில் சீவனுக்கு ஏற்படும் நிலையையும் விவரிகின்றார்.

*‘சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி’* (திருமந்திரம், 2474)

சீவன் பரமுத்தியை அடையும். பரமுத்தி என்பது ஆன்மா தன் செயலற்று, இறைவனின் அருள் வழி நிற்கும் நிலை ஆகும்.

தொடர்ந்து, அருணகிரிநாதர் உயிரைப் பற்றி விளக்குகின்றார்.

*‘சீவன் சிவச்சொருபம்’* (திருப்புகழ், 239)

உயிரானது (ஜீவாத்மா) பரமாத்மாவான சிவனது சொரூபம் என்று கூறுகின்றார். இத்தகைய உயிரின் இருப்பிடத்தையும் சுட்டுகின்றார்.

*‘சுடரி னூடு நால்வேத முடியிடு மூடாடு*

*துரிய வாகு வாதீத சிவரூபம்’* (திருப்புகழ், 272)

ஒப்பற்ற ஞான ஒளியினுக்குள்ளும் நான்கு வேத உச்சினுள்ளும் ஊடாடுகின்றதும் துரிய நிலையில் இருப்பதும், துன்பங்கள் கடந்த நிலையில் உள்ளதே சிவரூபம்.

சீவனில் சிவன் உள்ளான் என்றும் அத்தகைய சீவன், சிவடிவமாக உள்ளான் என்று திருமூலரும் அருணகிரிநாதரும் ஒருமித்து ஒப்புக்கொள்ளுகின்றனர். சிவ வடிவமான சீவன் மனித தலையின் உச்சிப் பகுதியில் இருப்பதாகவும், அங்கு சிவன் சோதியாய் ஒளிர்வதாகக் கூறி, இந்த உச்சிப் பகுதியே, முத்தி நிலை நிகழும் இடம் என்றும் கூறுகின்றனர். சித்தர் ஒருவர் இக்கருத்தினையே

*‘உச்சிக்கு கீழ்அண்ணாவுக்கு மேல் அணையா விளக்கு நித்தம்*

*எரியுதடி ஞானப் பெண்ணே’*

என்று உயிர் உள்ள இடத்தைச் சுட்டிக் காட்டுகிறார். சிவன் சீவனில் உள்ளான் என்பது சித்தர்களின் தத்துவமாகும். இக்கருத்தை சிவவாக்கியர் விவரிக்கின்றார்.

*'உற்றிந்து பாரடா உள் ஒளிக்கு மேல் ஒளி*

*அத்தனார் அமர்ந்திடம் அறிந்தவன் அனாதியே'* (சிவவாக்கியர், 98)

அணுவுக்கு அணுவாக, நீல நிற ஒளிவட்டமாக விளங்கும் சக்தியின் பீடத்தின்நடுவில் தீபச் சுடராக சிவம் விளங்குகின்றது எனவும் அந்தத் தீப வடிவே உயிரின் வடு என்று சிவவாக்கியர் கூறுகின்றார். திருமந்திரமும் திருப்புகழும் கூறும் சீவனில் சிவன் உள்ளான் என்றும் அத்தகைய சீவன், சிவடிவமாக உள்ளான் என்னும் இக்கருத்து சித்தர்களின் உயிர்க்கோட்பாடினை ஒட்டியே அமைந்துள்ளது.

**குண்டலினி அனுபவம்**

தனக்குள் இருக்கும் சிவத்தை அடைய சித்தர்கள் கையாண்ட முறை குண்டலினி யோகம் அல்லது வாசி யோகம் எனப்படும். குண்டலினி என்பது ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கும் பேரண்ட சக்தியின் வடிவமாகும். சித்தரியலில் குண்டலினி உயிரைக் குறிக்கின்றது (வேங்கடவன், 2007). ஆகவே, இது உயிர்சக்தி அல்லது மூலசக்தி என்றும் அழைக்கப்படுகின்றது. குண்டலினி சக்தியானது மூலாதாரத்தில் ஒரு சுருட்டிய பாம்பு போன்று முச்சுருளாகச் சுருண்டு உறங்கும் நிலையில் உள்ளது. இச்சக்தியை எழுப்ப கை கொடுக்கும் கலைக்குக் 'குண்டலினி யோகம்' எனப்படும். இவ்வாறு எழுப்பப்பட்ட குண்டலினி சக்தியானது முதுகுத்தண்டின் நடுவழியே உள்ள சுழுமுனையின் ஊடே மேல் நோக்கிச் சென்று, ஆறாதாரங்களையும் கடந்து, ஏழாவது ஆதாரத்திலுள்ள வெட்டவெளியில் விளங்கும் சிவத்துடன் பொருந்தும். சித்தர்கள் வெட்டவெளியை வெளியுள் வெளி, உயிர்வெளி, வேதாந்த வெளி, காலக்கடுவெளி, கருவூரற்ற வெளி, சரசமான வெளி, தூவெளி, முப்பாழ், உச்சவெளி, தனிவெளி, ஏகவெளி, ஒளிவெளி, பரவெளி, நாதாந்தவெளி, பாழ்வெளி என்றும் அழைக்கின்றனர் (ஞானதீபன், 2008; கணபதி, 1993). இக்குண்டலினியே, சீவத்தைச் சிவத்தோடு வெட்டவெளியில் பொருந்தச் செய்யும் சக்தியாகும். இவ்வெட்டவெளியில் ஏற்பட்ட குண்டலினி அனுபவத்தைத் திருமூலரும் அருணகிரிநாதரும் பகிர்ந்துள்ளனர்.

திருமூலர் தனது குண்டலினி அனுபவத்தை விவரிக்கின்றார்.

*'ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை*

*ஏற்றலுற் றேன்கடல் ஏழுங்கண்டேன்'*

(திருமந்திரம், 2868)

ஏறுவதற்கு அருமையான சுழுமுனையாகிய ஏணியை வைத்து அம்மரத்தின் மேலேறி சகசரதளம் சென்றேன். அங்கு, ஏழு ஆதாரங்களும் ஒன்றாகி, ஒளிமயமாய்ப் பொங்குவதைக் கண்டேன். திருமூலர் தன்னுடைய குண்டலினி அனுபவத்தைத் தொடர்ந்து விளக்குகின்றார்.

*'வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது*

*புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது*

*தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகள்*

*முழுதும் பழுத்தது வாழைக் கனியே'* (2869)

குண்டலினி யோகத்தை மேற்கொண்ட போது (கத்தரி விளைவித்தல்), வைராக்கியம் கிடைத்தது (பாகல் விளைவித்தல்). ஆன்ம தத்துவங்களைப் பரிசோதித்த போது (புழுதியைத் தோண்டுதல்) சிவதத்துவத்தைக் கண்டேன் (பூசணி பூத்தல்). சிவதத்துவத்தைக் கண்டறிந்து கொண்ட பின்னர், புலவுணர்வுகள் விட்டு அகன்று (தோட்டக்குடிகள் ஓடல்), சிவானுபவம் விளைந்தது (வாழைக்கனி முற்றிலும் பழுத்தல்). ஞானச்சாதனையால் ஆன்ம சித்தியாகிய சிவக்கனி கிட்டும். குண்டலினியின் வழி, சிவமாகிய சோதியை வெட்டவெளியிலும் உடல் முழுமையும் உணர்ந்ததாகக்கூறும் திருமூலர் தான் வீடுபேறு (முக்தி) அடைந்தைச் சொல்லாமல் சொல்லுகின்றார்.

தொடர்ந்து, அருணகிரிநாதர் தன்னுடைய குண்டலினி அனுபவத்தைக் கூறுகின்றார்.

*'மெய்ப்பொருள் தரும் பராசத்தியில் பரமான*

*துரியமேல் அற்பதப் பரமஞானத் தனிச்*

*சுடர்வியா பித்த நற்பதி நீடு*

*துகளில் சாயுச்சியக் கதியை ஈறற்றசொல்*

*சுகசொரூபத்தை உற்று அடைவேனே'*

(திருப்புகழ், 424)

உண்மையான ஞானத்தைத் தரவல்ல, பராசக்தியினும் மேலானதானதும் யோகியர் தன்மயமாய் நிற்பதுவும், அதற்கும் மேம்பட்டதான துரியாதீத நிலையானதுமாகி, பரம ஞானத் தனி ஒளியாய் பரந்து, சிறந்த இடமாய், குற்றமில்லாததாய், இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேறின்ப நிலையை வேண்டுகின்றார். இது அருணகிரிநாதாரின் வேண்டுகோலாக இருந்தாலும், மறைமுகமாக தான் அடைந்த குண்டலினி அனுபவத்தை விவரிக்கின்றார். வெட்டவெளியில் காணும் சோதியைப் 'பரம ஞானத் தனி ஒளி' என்றும், அந்த இடம் 'இறைவனோடு இரண்டறக் கலந்து பேறின்ப நிலையை' அடையும் இடம் என்பதுடன், அந்த இடமே தான் 'சாயுச்சியம் பேறு' அடையும் இடம் என்றும் கூறுகின்றார். சாயுச்சியப் பேறு என்பது இறைவனுடன் இரண்டறக் கலந்து, முடிவிலாப் பேரானந்த முக்தி நிலையில் இருத்தல் ஆகும்.

திருமூலர், அருணகிரிநாதர் ஆகியோரின் கூற்றுப்படி, குண்டலினியானது வெட்ட வெளியில் பொருந்துகையில், சிவம் பெரும் சோதியாய், ஞான ஒளியாய் ஒளிரும். அவ்வொளியில் சீவன் சிவத்துடன் இரண்டறக் கலந்து, முடிவிலாப் பேரானந்த முக்தி நிலையில் இருக்கும் என்கின்றனர்.

இதற்கிடையில், கொங்கணர் சித்தர் (2017),

*'எரியுதே அறு வீட்டினிலே யதில் எண்ணையில்லை'*

(பாடல், 26)

என்று கூறுகின்றார். குண்டலினி சக்தியானது ஆறு ஆதராங்களையும் ஒளிப் பொங்கச் செய்வதாகக் கூறுகின்றார். சிவவாக்கியரும் தன்னுடைய குண்டலினி அனுபவத்தைப் பகர்கின்றார்.

*'மூலநாடி தன்னிலே முளைந்த்தெழுந்த சோதியை*

*நாலு நாழி உம்முளே நாடியே இருந்தபின்*

*பாலனாகி வாழலாம் பரப்பிரம்ம மாகலாம்'*
(பாடல், 125)

மூல நாடியாகிய சுழுமுனையில் தோன்றும் ஒளியை நான்கு நாழிகை நேரம் உள்ளேயே விரும்பி இருந்தால், அவ்வொளியின் வழி இளமையும் இறைத்தன்மையும் அடைந்து, நிலைத்த பேரானந்த முக்தி நிலையில் வாழலாம் என்கின்றார். திருமூலர், அருணகிரிநாதர் ஆகியோரின் குண்டலினி அனுபவமானது சித்தர்களின் வெட்டவெளித் தத்துவத்தையே விவரிக்கின்றது.

## முடிவுரை

திருமந்திரமும் திருப்புகழும் சித்தர்களின் ஒரே இறைக்கோட்பாட்டினை வலியுறுத்துவதுடன், அவ்விறைவன் சிவன் என்றும், அவன் சிவமும் சக்தியாய் வெட்டவெளியில் விளங்குவதாய்க் கூறுகின்றன. இத்தகைய சிவன் சீவனில் உள்ளான் என்றும், இவ்விரண்டையும் வெட்டவெளியில் இணைக்கும் மாபெரும் சக்தியே குண்டலினி என்னும் சித்தர் தத்துவத்தையும் வலியுறுத்துகின்றன. ஆகவே, இறை, உயிர், குண்டலினி ஒட்டிய திருமந்திர, திருப்புகழ்க்கோட்பாடுகள் அனைத்தும் சித்தரியல் சிந்தனைகளேயாகும். எனவே, ஆன்மிக பயணம் மேற்கொள்வோர், இறைவன் ஒருவனே உளான், அவன் நம் உள்ளத்தில் பெரும் சோதியாய், ஞான ஒளியாய் உறைகின்றான் என்பதை உணர்ந்து, முறையான அகவழிபாட்டின் மூலம் அவ்வொளியில் பொருந்தி, முடிவில்லா பேரானந்த நிலையை அடைய வேண்டும் என்பதே கட்டுரையாளரின் எதிர்ப்பார்ப்பாகும்.

## References

Anbalagan, R. (2006). *Siddhar venba.* Chennai, India: Chennai University.

Chengalvaraya Pillai, V. (. (2019). *Arunagirinathar aruliya tiruppukal.-Mulamum uraiyum (3 vols.)* . Chennai, India: Saran Books.

Devanayagam. (1998). *Siddhar sinthanaigal.* Chidambaram, India: Manivasagar Nuulagam.

Ezhilraman, R. (2015). *Siddha cult in Tamil nadu: Its history and historical continuity (Unpublished thesis).* Puducherry, India: Pandicherry University.

Ganadeepan, S. (2008). *Siddhar padalgalil yogakalaikoorugal.* Thirucirappalli, India: Bharathidasan University.

Ganapathy, T. (1993). *The philosophy of the tamil siddhas.* New Delhi, India: Indian Council of Philosophical Research.

Govindan, M. (2007). *The wisdom of jesus and the yoga siddhas.* Quebec, Canada: Babaji's Kriya Yoga and Publications, Inc.

Govindan, M. (2021). *The concepts of saiva siddhantam in cuntarar tevaram.* Tanjong Malim, Malaysia: Sultan Idris Education University.

Magarasan, C. (1997). Siddhargal yaar. *Sixth World Saiva Conference* (p. 237). Tanjavur, India: Tamil University.

Narayanan, K. (1990). *Siddhar thatththuvam.* Chennai, India: Tamil Puththakalayam.

Padrakriyar. (2017). Padrakriya meynjnana pulampal. In C.S. Murugesan, *Periya Njanak Kovai* (pp. 324-345). Chennai, India: Tamil Inaiyakk Kalvikkazhagam, Anna Palkalaikazhagam.

Pattinathar. (2017). Pattinathar Padalgal. In C. S. Murugesan, *Periya Njanak Kovai* (pp. 95-174). Chennai, India: Tamil Inaiyak Kalvikkazhagam, Anna Palklaikazhagam.

Ranjith, N. (2019). *Arunagiriyaradhu paduporul.* Tirucchi, India: Bharathidasan University.

Rathinasabapathy, V. (1979). *Tirumurai thelive sivanjana botham.* Chennai, India: Madras University.

Santhi, N. (1997). Ezhaththu siddhar marapu. *Sixth World Saiva Conference* (pp. 217-218). Tanjavur, India: Tamil University.

Sathananthan, S. V. (2002). *Tiruppukalil saiva sithantham.* Retrieved from Tamil Digital Library: https://www.tamildigitallibrary.in/

Konganar Siddhar. (2017). Konganar siddhar padalkal. In C.S. Murugesan, *Periya Njanak Kovai* (pp. 346-362). Chennai, India: Tamil Inaiyakk Kalvikkazhagam, Anna Palkalaikazhagam.

Sivavakkiyar. (2017). Sivavakkiyam. In C.S. Murugesan, *Periya Njanak Kovai* (pp. 9-94). Chennai, India: Tamil Inaiyyak Kalvikkazhagam, Anna Palkalaikazhagam.

Vaalmeegar, S. (2017). Vaalmeegar Sootthira Jnanam. In C. S. Murugesan, *Periya Jnanak Kovai* (p. 389). Chennai, India: Tamil Inaiyak Kalvik Kazhagam, Anna Palkalaik Kazhagam.

Varadharajan, G. (2008). *Tirumanthiram (3 vols.).* Chennai, India: Palaniappa Brothers.

Vasu, R. (2008). Rupa, arupa, and rupa-arupa: The three forms of Siva worship at the Nataraja's temple of Chidambaram, South India and their impact on the temple architecture. *Prof S. V. Shanmugan's 75th Birthday Celebration Volume*. Annamalainagar, Tamil Nadu, India: Annamalai University, India. Retrieved January 25, 2024, from https://www.sas.upenn.edu/~vasur/Three_forms_of_Lord_Nataraja.pdf

Vengadavan. (2007). *Kundalini-Eliya vilakkam.* Chennai, India: Karpagam Puttakalayam.